கோயம்புத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.ர.பாலமுரளி, எம்.ஏ. பி.எட்.,
ப.மு.எண் 1119/அ-1/2024 நாள் 08.02.2024.
தை-25 திருவள்ளுவராண்டு 2053

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை, கோயம்புத்தூர் மாவட்டம் – பொதுசார்நிலைப்பணியான பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு

பார்வை :1).அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக்கல்வித் (வரவு செலவு-I) துறை நாள் 18.05.2018
2)கோயம்புத்தூர், முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 5202/அ-1/2023 நாள் 18.10.2023.
3) தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, ஊமப்பாளையம், கடிதம் ந.க.எண் 19/2023-24 நாள் 02.02.2024

------

தமிழ்நாடு பொதுசார்நிலைப்பணியின் கீழுள்ள பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து, தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்ட கீழ்கண்ட பணியாளருக்கு அவரது பெருக்கெதிரில் கலம் (3)ல் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் இடம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருமதி.மு.பிரபாவதி, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி ஊமப்பாளையம் - 641 305 கோயம்புத்தூர் மாவட்டம் | 18.10.2023 முற்பகல் | 18.10.2023 முற்பகல் |

1) இந்த பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவர் தகுதிகாண் பருவக் காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினையும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்சி பெறவேண்டும். தகுதிகாண் பருவக் காலத்தில் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனில், இந்தப் பணியாளர் பணிபுரியும் அலுவலகத்தின் அலுவலகத் தலைவர் உடனடியாக நியமன அலுவலரான முதன்மைக் கல்வி அலுவலருக்கு தகவல் அளிக்கவேண்டும்

2) மேலும் 2016 ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் ) சட்டம் கூறு 31 உட்பிரிவு 4-ல் "ஒரு அரசு ஊழியரின் தகுதிகாண் பருவ நீட்டிப்பு காலம், அவருக்கு போதுமான காலம் அதிகப்பட்சமாக ஐந்தாண்டு காலமாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஐந்தாண்டு காலத்திற்குள் அவர் தேர்ச்சி பெறவில்லை என்றால் அவர் பதவியிறக்கம் செய்யப்படவேண்டும். அத்தகைய நேரடி நியமனம் மூலம் பதவி அமர்த்தம் செய்யப்பட்டுளள நபர் பெருமளவு ஐந்து வருட காலத்திற்குள் அவர் தேர்வு தகுதியை பெற்றிருக்கவில்லையென்றால் அவருடைய தகுதிகாண் பருவம் இல்லா நிலையாக்கிவிடும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) இப்பணிவரண்முறை ஆணை தனியரது 10ம் வகுப்பு மதிப்பெண் சான்று உண்மைத்தன்மை வாய்ந்தது என சான்று பெற்றதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்தான பதிவுகள் சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 1 பவுண்ட்

முதன்மைக் கல்வி அலுவலர்
கோயம்புத்தூர்-641001

08.02.2024

பெறுநர்

திருமதி.மு.பிரபாவதி, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி ஊமப்பாளையம், கோயம்புத்துரர் மாவட்டம். 641 305 (தலைமை ஆசிரியர் மூலம்)

நகல்: தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி. ஊமப்பாளையம், கோயம்புத்துரர் மாவட்டம்- 641 305